பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

21 03 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- இந்தியா 140 கோடி மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- நாட்டின் எல்லைகள் மற்றும் தேசத்தின் நலனை பாதுகாக்க காங்கிரஸ் உறுதிபூண்டுள்ளதாக அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.
- பொது இடங்களில் உள்ள சுவரொட்டிகள், ஓவியங்களை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அனைத்து மாநில அரசுகளையும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.
- உலக காடுகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.
- தேசிய சீனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் மத்திய பிரதேசம், ஹரியானா, ஜார்க்கண்ட் மற்றும் மகாராஷ்டிரா அணிகள் அரை இறுதிக்கு தகுதிபெற்றுள்ளன.

----- *இனி விரிவான செய்திகள்* ---

**[]<<<>>>[]**

இந்தியா 140 கோடி மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தென்கொரியாவின் சியோலில் நடைபெற்ற ஜனநாயகத்திற்கான உச்சி மாநாட்டில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், உலகெங்கிலும் உள்ள ஜனநாயக நாடுகள் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ள இந்த உச்சி மாநாடு ஒரு முக்கிய தளமாக அமைந்துள்ளது என்றார்.

ஜனநாயகத்தின் மீது இந்தியாவுக்கு உள்ள ஆழமான உறுதிப்பாட்டை அவர் எடுத்துரைத்தார்.

ஒருமித்த கருத்தை உருவாக்குதல், சுதந்திரமான விவாதம் ஆகியவை இந்தியாவின் பண்புகள் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் மகளிருக்கு அதிகாரமளித்தல், வறுமை ஒழிப்பு போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் அடுத்த சில வாரங்களில் மிகப்பெரிய ஜனநாயகத் திருவிழா நடைபெறவுள்ளதாக கூறிய அவர் உலகிலேயே மிகப்பெரிய தேர்தல் நடைமுறையாக இது இருக்கும் என்று கூறினார்.

ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை இந்திய மக்கள் மீண்டும் உறுதி செய்ய உள்ளதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நாட்டின் எல்லைகள் மற்றும் தேசத்தின் நலனை பாதுகாக்க காங்கிரஸ் உறுதிபூண்டுள்ளதாக அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

லடாக் தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியாவின் நிலப்பரப்பை சீனா தொடர்ந்து ஆக்கிரமித்துள்ளதாகக் கூறியுள்ளார்.

பலசுற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளபோதிலும், சீனாவுடனான பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

லடாக் தொடர்பான விஷயங்களில் பிரதமர் திரு நரேந்திரமோடி-யின் வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்று திரு மல்லிகார்ஜுன கார்கே குற்றம்சாட்டியுள்ளார்.

**[]<<<>>>[]**

சக்தி குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியது தொடர்பாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல் காந்தி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேர்தல் ஆணையத்திடம் பிஜேபி புகார் அளித்துள்ளது.

மும்பையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு ராகுல் காந்தி பேசிய கருத்துகள் தொடர்பாக இந்தப் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஹர்தீப் சிங் பூரி, திரு ராகுல் காந்தி தமது கருத்துக்கள் மூலம் மத உணர்வுகளை அவமதித்துள்ளதாகத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பெங்களூரு ராமேஸ்வரம் கஃபே-யில் நிகழ்ந்த குண்டு வெடிப்புக் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசிய பிஜேபி பிரமுகரும் மத்திய இணை அமைச்சருமான திருமதி ஷோபா கரந்த்லாஜே மீது திமுக அளித்த புகார் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கர்நாடக தலைமை தேர்தல் அதிகாரிக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக 48 மணி நேரத்துக்குள் அறிக்கை அளிக்குமாறு கர்நாடக தலைமைத் தேர்தல் அதிகாரியைத் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

[]<<<>>>[]

ஹரியானாவில் மக்களவைத் தேர்தலை சுதந்திரமாகவும், நியாயமாகவும் அமைதியாகவும் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறைத் தலைவர் திரு சத்ருஜீத் கபூர் கூறியுள்ளார்.

நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பஞ்சகுலாவில் உள்ள காவல்துறை தலைமையகத்தில் தேர்தல் பிரிவு அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், தேர்தல் நடத்தை விதிகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்யவும் உரிய நடவடிக்கைகளை இந்தப் பிரிவு மேற்கொள்ளும் என்று அவர் தெரிவித்தார்.

தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக மத்திய ஆயுதக் காவல் படைகளைச் சேர்ந்த 12 கம்பெனிகள் மாநிலத்துக்கு வந்துள்ளதாகவும் அம்மாநில காவல்துறை தலைவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாகாலாந்தில் தேர்தல் வாக்குப்பதிவுக்காக இரண்டாயிரத்து 342 வாக்குச் சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு வியாசன் கூறியுள்ளார்.

கோஹிமாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதில் 750 வாக்குச் சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மாநிலத்தில் 16 ஆயிரம் பேர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

தேர்தல் பாதுகாப்புப் பணிக்காக மத்திய ஆயுத காவல் படையின் ஐந்து கம்பெனிகள் ஏற்கனவே மாநிலத்திற்கு வந்துள்ளதாகவும் திரு வியாசன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று மேற்கொள்ளவிருந்த பூட்டான் அரசுமுறைப் பயணம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டின் பரோ பகுதியில் நிலவும் மோசமான வானிலை காரணமாக இந்த பயணம் ஒத்தி வைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

உலக காடுகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

காடுகளை பாதுகாப்பது தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகின்றன.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு காடுகளை பாதுகாப்பதும், மரங்கள் வளர்ப்பதும் அவசியமாகும்.

இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21-ஆம் தேதியை உலக காடுகள் தினமாக ஐ நா அறிவித்துள்ளது.

2013-ஆம் ஆண்டு முதல் இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

[]<<<>>>[]

தேர்தல் நடத்தை விதிகளை மீறி பொது இடங்களில் உள்ள சுவரொட்டிகள், ஓவியங்களை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக அனைத்து மாநில தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ள கடிதத்தில், பல இடங்களில் அனுமதி இல்லாத சுவரொட்டிகள், ஓவியங்கள் அகற்றப்படாமல் உள்ளதாக புகார்கள் வந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

ஆணையத்தின் அறிவுறுத்தல்கள் முழுமையாக பின்பற்றப்பட வேண்டும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

எனவே அனுமதி இல்லாத அரசியல் விளம்பரங்களை உடனடியாக அகற்ற மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இது தொடர்பான அறிக்கையை இன்று மாலை ஐந்து மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பஙகேற்ற முதல் முறை வாக்காளர்களான அக்ஷயா மற்றும் இந்துமதி, பணமோ பரிசுப் பொருட்களோ பெறாமல் அனைவரும் வாக்களிக்க வேண்டுமென்று தெரிவித்தனர்.

*சவுண்ட்பைட் - அக்ஷயா, இந்துமதி ) -50—செகண்ட்*

[]<<<>>>[]

பீகாரில் மார்ச் 15-ம் தேதி நடைபெற்ற ஆசிரியர் பணிக்கான தேர்வு ரத்து செய்யப்படுவதாக அந்த மாநில அரசு பணியாளர் தேர்வாணையம் அறிவித்துள்ளது.

தேர்வுக்கு முன்னதாகவே வினாத்தாள்கள் வெளியானதாக தகவல் வெளியானதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் தேர்வு நடத்தப்படும் தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் பீகார் அரசுப் பணியாளர் தேர்வாணையம் கூறியுள்ளது.

இதனிடையே இது தொடர்பாக பீகார் காவல்துறை 270 பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறது.

[]<<<>>>[]

பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழாவில் ரஷ்யா மற்றும் பெலாரஸ் வீரர்கள் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பேசிய சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் இயக்குனர் ஜேம்ஸ் மெக்லியோட், அந்த நாடுகளில் இருந்து ஒலிம்பிக் போட்டிக்குத் தேர்வான வீரர்கள், அந்த நாடுகளின் கொடி மற்றும் தேசிய கீதம் இல்லாமல் தனிப்பட்ட முறையில் சுயேச்சையாக அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

[]<<<>>>[]

தேசிய சீனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் மத்திய பிரதேசம், ஹரியானா, ஜார்க்கண்ட் மற்றும் மகாராஷ்டிரா அணிகள் அரை இறுதிக்கு தகுதிபெற்றுள்ளன.

புனேயில் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் மத்திய பிரதேச அணி — பெங்கால் அணியையும், ஹரியானா — ஒடிஸாவையும் வென்றன.

இதேபோல் ஜார்க்கண்ட் - மிசோராமையும், மகாராஷ்டிரா — மணிப்பூரையும் வென்று அரை இறுதிக்கு முன்னேறின.

அரை இறுதி ஆட்டங்கள் நாளையும், இறுதி ஆட்டம் நாளை மறுநாளும் நடைபெறுகின்றன.

**[]<<<>>>[]**

ப்ரைம் வாலிபால் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கோழிக்கோடு அணி — சென்னை அணியை இன்று எதிர்கொள்கிறது.

சென்னையில் மாலை மணி 6-30-க்கு இப்போட்டி தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை கால்பந்து தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

சௌதி அரேபியாவின் அபா நகரில் இந்திய நேரப்படி நள்ளிரவு மணி 12-30-க்கு இப்போட்டி தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ், பிரியன்ஷூ ரஜாவத், லக்ஷயாசென், பி வி சிந்து ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**[]<<<>>>[]**